செ.வெ.எண்: 50 நாள்: 25.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உலமாக்கள் மற்றும் இதரபணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக சேர கோருதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் முஸ்லீம் இனத்தை சேர்ந்தவர்கள் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் 18வயது முதல் 60 வயதுவரை உள்ள ஒவ்வொருவரும் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம். உலமாக்கள் மற்றும் இதரபணியாளர்கள் நலவாரியத்தில் உள்ள உறுப்பினர்கள் விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை ரூ.1,00,000/-வழங்கப்படும், விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்பரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- வரையும் உறுப்பினரின் இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000/- ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை ரூ.5000/-வழங்கப்படும். மேலும் மாணவ/மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை மற்றும் ஊக்கத் தொகைகளும் இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாரியத்தில் உறுப்பினராக சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தைwww.bcmbcmw.tn.gov/welfschemes_minorities.htmlஎன்ற இணையதளத்தின் மூலமாகவும் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். எனவே உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நலவாரியத்தில் இதுவரை உறுப்பினர்களாக பதிவு செய்யாதவர்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை எண்.222-ல் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி உடனடியாக பதிவு செய்து மேற்காணும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையுமாறு, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**